அ.தி.மு.க. ஆட்சி வாங்கி வைத்திருந்த கடன் ரூ.6,45,000 கோடி!

தி.மு.க. அரசு வாங்கிய கடன் ரூ.2,85,000 கோடி மட்டுமே!

சட்டப்பேரவையில் – அமைச்சர் எ.வ.வேலு ஆதாரங்களுடன் விளக்கம்!

சென்னை, பிப். 20– சட்டப்பேரவையில் பா.ஜ.க. உறுப்பினர் நயினார் நாகேந்திரன் பேசுகையில் குறுக்கிட்டு விளக்கமளித்த பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு "அ.தி.மு.க. ஆட்சி வாங்கி வைத்து விட்டுச் சென்ற கடன் மட்டுமே ரூ. 6 இலட்சத்து 45 ஆயிரம் கோடி" என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் இது குறித்து அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:

தமிழ்நாட்டைப் பொறுத்தளவில், ஏதோ திராவிட மாடல் ஆட்சியில்தான் அதிகமாக கடன் பெற்றதைப்போல, சமூக வலைதளங்களில்கூட, பல நண்பர்கள் செய்திகளைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் கூற வேண்டுமென்றால், எதிர்க்கட்சியினுடைய தலைவராக இருப்பவர், தான் செல்கின்ற பொதுக் கூட்டங்களில் எல்லாம், திராவிட மாடல் ஆட்சியில்தான் அதிகமாகக் கடன் வாங்கியதைப் போன்று பொதுக் கூட்டத்திலும் பேசுகிறார். அதைப்போலத்தான், நீங்கள் அவருடைய தோழர் என்கிற காரணத்தால் நீங்களும் பேசுகிறீர்கள். உண்மை நிலைமை என்ன? பொதுவாக இந்த ஆட்சியில், நாங்கள் பொறுப்பேற்கிறபொழுது, அந்த ஆட்சி வாங்கி வைத்திருந்த கடன் 4.57 இலட்சம் கோடி ரூபாய், அதாவது அந்த ஆட்சியில் 4,57,000 கோடி ரூபாய் கடன் வைத்தார்கள். அதற்கான வட்டி 37,586 கோடி ரூபாய் அவர்கள் வாங்கிய கடனுக்கு மட்டும் ஒரு ஆண்டுக்கு இவ்வளவு. 5 ஆண்டுகாலத்திற்கு அவர்கள் வாங்கிய கடனை ஒப்பிட்டு பார்க்கும்பொழுது, ஏறத்தாழ 1.88 இலட்சம் கோடி ரூபாய் வட்டி மட்டும் வருகிறது. ஆக, ஏற்கெனவே அசல் 4,57,000 கோடி ரூபாய் அவர்கள் வாங்கிய கடனுக்கு வட்டி, இந்த ஐந்தாண்டு காலமாக கட்டியது 1.88 இலட்சம் கோடி ரூபாய். மொத்தம் அ.தி.மு.க மூலமாக எங்களுக்கு வந்திருக்கிற கடன் 6,45,000 கோடி ரூபாய்.

இந்த ஆட்சியைப் பொறுத்தளவில், நாங்கள் வாங்கிய கடன் 2,85,000 கோடி ரூபாய்தான். ஒட்டுமொத்தமாக 9 இலட்சம் கடன் வாங்கினோம் என்று சொல்கிறீர்கள். (மணியடிக்கப்பெற்றது) 9 இலட்சம் ரூபாய் கடன் திராவிட மாடல் ஆட்சியில், தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் வாங்கவில்லை. அ.தி.மு.க ஆட்சியில் 6.45 இலட்சம் கோடி ரூபாய் கடன் வாங்கப்பட்டது. இதுதான் உண்மையான கணக்கு. இந்த 2,85,000 கோடி ரூபாயில் கூட, உதாரணத்திற்காக சொல்கிறேன். இந்த 2,85,000 கோடி ரூபாயில் பார்த்தால்கூட, ஏற்கெனவே அந்த ஆட்சியில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள், பல துறைகளில் அறிவிக்கிறார்கள். போகிறபொழுது அறிவித்து விட்டுப் போய் விடுகிறார்கள். அறிவித்துவிட்டுப் போனால் அந்தக் கட்டடங்களைக் கட்டுவதில்லையா? சாலைகள் போடுவதில்லையா? நான் வகிக்கிற இரண்டு துறைகளில் மட்டும் நான் சொல்கிறேன். அவர்கள் அறிவித்து விட்டுப் போனது 11,923 கோடி ரூபாய்க்கு அறிவிப்பு செய்துவிட்டு போய்விட்டார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு 8,560 கோடி ரூபாய் பொதுப் பணித் துறையில் இந்த அரசாங்கம் செலவு செய்திருக்கிறது. பல துறைக்கு கட்டடம் கட்டுவதற்கு நீங்கள் அறிவித்து விட்டு சென்றுவிட்டீர்கள். அதற்கு பணம் நாங்கள் செலவு செய்திருக்கிறோம்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தளவில், 13,898 கோடி ரூபாய் நீங்கள் அறிவித்த திட்டத்திற்கு நாங்கள் செலவு செய்திருக்கிறோம். இதையெல்லாம் கூட்டிப் பார்த்தால், நாங்கள் செலவு செய்த 2,85,000 கோடி ரூபாயில் கூட இந்த நிலைமை இருக்கிறது. அதோடுமட்டுமல்ல, ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தளவில், எப்போது பார்த்தாலும், நாங்கள் 11 மருத்துவக் கல்லூரியை அறிவித்தோம், 11 மருத்துவக் கல்லூரியைக் கட்டினோம் என்று ஒரு லாலி பாடிக்கொண்டிருக்கிறார்கள். 11 மருத்துவக் கல்லூரிக்காக ஒதுக்கப்பட்ட பணம் அரசின் சார்பாக 4,055 கோடி ரூபாய். நீங்கள் சொல்லிவிட்டுச் சென்றீர்கள். முழுவதும் நீங்கள் செலவு செய்தீர்களா? இல்லை. திராவிட மாடல் ஆட்சி வந்தவுடன் மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள், அதற்காக 2,349 கோடி ரூபாய் இந்த ஆட்சியில் செலவு செய்திருக்கிறோம். கணக்குப் பார்க்கிறபொழுது நீங்கள் அறிவித்த அந்தக் மருத்துவக் கல்லூரிக் கட்டடங்களுக்கு 42% தான் நீங்கள் செலவு செய்திருக்கிறீர்கள். திராவிட மாடல் ஆட்சியில் 58% நாங்கள் செலவு செய்திருக்கிறோம். நாங்கள் வாங்கிய கடன்கூட எதற்காக என்றால், நீங்கள் அறிவித்திருக்கிற கட்டடத்திற்கும், அதன் தொடர்ச்சியாக, மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் எத்தனை வந்திருக்கின்றன. அவற்றை வேண்டாம் என்று சொல்கிறீர்களா?

காலை உணவுத் திட்டத்தை வேண்டாம் என்கிறீர்களா? புதுமைப்பெண் திட்டத்தை வேண்டாம் என்கிறீர்களா? தமிழ்ப்புதல்வன் திட்டத்தை வேண்டாம் என்கிறீர்களா? இவ்வாறு பல்வேறு மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்றால் அதற்காகச் செலவு செய்திருக்கிறோம். இந்த ஆட்சியைப் பொறுத்த வரையில் நாட்டு மக்களினுடைய நலன் கருதி, மக்களுடைய சேவையைப் பூர்த்தி செய்வதற்காகத்தான் 2,85,000 கோடி ரூபாய் கூட வாங்கியிருக்கிறோம். ஒட்டுமொத்தமாக நீங்கள் வாங்கிய கடன், அதற்குரிய வட்டி எல்லாம் சேர்த்து 9 இலட்சம் ரூபாய் நாங்கள் வாங்கினோம் என்பது கடைந்தெடுத்த கணக்கு; அதனால் சொல்கிறேன், நாங்கள் வாங்கிய கடன் 2,85,000 கோடி ரூபாய். அதற்குத் தேவைப்படும் அத்தனை விவரங்களையும் நான் வைத்திருக்கிறேன். நேரத்தையும், காலத்தையும் கருதி இத்துடன் நான் நிறுத்திக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி மற்றும் 33வது வட்ட கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் பிறந்தநாள் விழா இவ்விழாவை முன்னிட்டு 4 வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி .காமராஜ் அவர்கள் ஏற்பாட்டில் வட்ட செயலாளர் எம்.வினோத் அவர்களின் தலைமையில் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் பொது கூட்டம் நடைபெற்றது இதில் மாற்றுக் கட்சிகளை சேர்ந்தவர்கள் அ.மு.முக, பா.ம.க ஆகிய கட்சிகளில் இருந்து விலகி கழகத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. முன்னிலையில் இணைந்து கொண்டனர் மேலும் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.உடன் மேயர் க. வசந்தகுமாரி, 5வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் சி. சுரேஷ், எல். பெரியநாயகம், ரமணி ஆதிமூலம், கி.வேலுமணி, ஜா.ரவிகுமார், ஆர்.செல்வகுமார், இரா.செல்வகுமார், மா.கன்னியப்பன், மற்றும் மாநகர, பகுதி, வட்ட நிர்வாகிகளும், கழக முன்னோடிகளும் பொதுமக்களும் பெரும் திரளாக பங்கேற்றனர் .

திறமையான நிதி மேலாண்மையால்

மாநிலத்தின் நிதிப்பற்றாக்குறை கட்டுக்குள் இருக்கிறது!

சட்டப்பேரவையில் – நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்!

சென்னை, பிப். 20– "திறமையான நிதி மேலாண்மையால் மாநிலத்தின் நிதிப்பற்றாக்குறை கட்டுக்குள் இருக்கிறது" என்று சட்டப்பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் அவர் கூறியதாவது:

கடன் குறித்து இந்த அவையிலே நான் பல முறைவிளக்கியிருக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்போது சொல்லக்கூடியதை ஒட்டி, ஏனென்றால் நான் நாளைக்குக்கூட பதிலிலே சொல்லலாம் என்று நினைத்தேன். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்படி குற்றச்சாட்டுகளை சொல்கிறபோது, நாளை பத்திரிகைகளில் அதில் வருகிறபோது என்னுடைய விளக்கமும் சேர்ந்து இடம் பெறுவதுதான் சரியாக இருக்கும் என்பதை நான் சொல்வேன்.

கடன் வாங்குவதாக இருந்தாலும் சரி, நிதி மேலாண்மையாக இருந்தாலும் சரி அவற்றையெல்லாம் நாம் ஒரு ஒப்பீட்டு அளவிலே எடுத்துக்கொண்டு பார்க்க வேண்டும் என்பதையும் நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். கடனைப் பொறுத்தமட்டில் 2011-2012 முதல் 2015-2016 வரை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் இருக்கக்கூடிய, அவருடைய காலத்திற்கு முன்பாக அஇஅதிமுக ஆட்சிப் பொறுப்பிலிருந்த அந்த காலகட்டத்தின் தொடக்க நிலை 1,01,349 கோடியாக இருந்தது. அது அந்த ஆட்சிக் காலத்தின் இறுதியிலே 2,11,066 கோடியாக கடனுடைய சதவிகித வளர்ச்சி என்பது 108 சதவிகிதமாக இருந்தது. 2016-2017 முதல் 2020-2021 வரை அவர்கள் முதலிலே விட்டுச் சென்ற 2,11,066 கோடியிலிருந்து ஏறத்தாழ 4,80,000 கோடி அளவிற்கு கடனுடைய வளர்ச்சி அந்த காலத்தில் இருந்தது. இது ஏறத்தாழ 128 சதவிகித வளர்ச்சியை கடன் பெற்றது.

2021-2022 ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வருகிறோம். ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டு நாங்கள் இப்போது இருக்கக்கூடிய இந்த ஐந்தாண்டு காலத்தில் 2025-2026 ஆம் ஆண்டை முடிக்கிறபோது, அவர்கள் விட்டுவைத்து போயிருந்த 4,80,300 கோடி, அதிலிருந்து ஆரம்பித்து இப்போது 9,42,851 கோடி. இந்த காலகட்டத்தில் கடனுடைய வளர்ச்சி எவ்வளவு என்று நீங்கள் பார்ப்பீர்கள் என்று சொன்னால் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதம் வெறும் 96 ஆகத்தான் இருந்தது. 96 சதவிகிதம். எனவே, நான் குறிப்பிட்டுச் சொல்வதைப்போல் நீங்கள் எவ்வளவு கடன் வாங்கியிருக்கிறீர்கள் என்று கடனுடைய வளர்ச்சியை நாம் பார்ப்போம் என்று சொன்னால் அஇஅதிமுக ஆட்சிக் காலத்திலே எந்தளவிற்கு கடனுடையவளர்ச்சிஇருந்ததோ அதைவிட மிகக்குறைவாக- 128 சதவிகிதம், உங்களுடைய கடந்த IMMEDIATE ஆக இருக்கக்கூடிய ஐந்தாண்டு காலத்தினுடைய அந்த கடன் வளர்ச்சியோடு எங்களுடைய கடன் வளர்ச்சியை நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தால், உங்களுடைய ஆட்சிக்காலத்தில் 128 சதவிகிதமாக இருந்தது கழக ஆட்சிக் காலத்தில் 96 சதவிகிதமாகத்தான் இருக்கிறது என்பதை நான் சொல்வேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, உங்களுடைய ஆட்சிக்காலத்தில் இருக்கக்கூடிய கடன் வளர்ச்சி என்பது நிச்சயமாக இந்த வகையிலே நீங்கள் பார்க்க வேண்டும். அதைப்போல நம்முடைய கடன் என்பது, பலமுறை திருப்பி திருப்பி சொல்கிறேன். நம்முடைய FINANCE COMMISSION, நிதிக் குழுவினுடைய எந்த வரம்பு இருக்கிறதோ அந்த வரம்பிற்குள்ளாகவே நாம் தொடர்ச்சியாக அந்த கடனை நாம் MAINTAIN செய்கிறோம். ஏனென்றால், திருப்பி திருப்பி நான் சொல்வதெல்லாம் ஒட்டுமொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்போடு நாம் பார்க்க வேண்டும். எனவே, அந்த வகையிலே நீங்கள் பார்ப்பீர்களென்று சொன்னால், 2025-2026 ஆம் ஆண்டு நிதிக் குழு கொடுத்திருக்கக்கூடிய வரம்பு என்பது 28.7 சதவிகிதம் என்றால் நாம் பெற்றிருக்கக்கூடிய சதவிகிதம் என்பது 26.43. எனவே, கட்டுக்குள்தான் அது இருந்திருக்கிறது. இந்த இடத்திலே நான் ஒரு முக்கியமான விவரத்தையும் சொல்ல வேண்டும்.

9-வது நிதிக் குழு காலத்தில் தமிழ்நாட்டிற்கு கொடுக்கக்கூடிய பங்கு என்பது 7.9 சதவிகிதமாக இருந்தது தொடர்ச்சியாக குறைக்கப்பட்டு, அந்த பங்கு 4.07 என்கின்ற அளவிலே குறைத்த போது, நமக்கு வர வேண்டிய நிதி ஒதுக்கீடு ஏறத்தாழ 3.1 இலட்சம் கோடி ரூபாய். FINANCE COMMISSION-லிருந்து வரக்கூடிய நிதிப் பகிர்வு குறைவதால் ஏறத்தாழ 7.9 சதவிகிதத்திலிருந்து 4.07 சதவிகிதமாக குறைகிற போது ஒட்டுமொத்தமாக 3.17 இலட்சம் கோடி ரூபாய் நமக்கு குறைவாக வருகிறது. அப்படி வரும்போது குறைக்கக்கூடிய காலம் ஒன்று. அதற்குபிறகு நமக்கு வர வேண்டிய மானியங்கள் எல்லாம் மறுக்கப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலை. இந்தக் குறைவு என்பதை எடுத்துப் பார்த்தால் நாம் வைத்திருக்கக்கூடிய மொத்த கடன் அளவிலே இது ஏறத்தாழ 33 சதவிகிதம். இது நமக்கு ஏற்கெனவே கிடைத்திருந்தால் கடனில் இருக்கக்கூடிய பெருமளவு அதற்கு ஈடு செய்யப்பட்டிருக்கும் என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். நிதிப் பற்றாக்குறை, நிதி மேலாண்மையைக் குறித்தும்கூட அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்தளவில் நீங்கள் எடுத்துக்கொள்வீர்கள் என்று சொன்னால், 2020-2021 அந்தக் காலக்கட்டத்தில் எவ்வளவு நிதிப் பற்றாக்குறை இருந்தது.

GST-உடைய சதவிகிதம் 4.6 சதவிகிதம்; நிதிப் பற்றாக்குறை FISCAL DEFICIT; 2025-2026 நாங்கள் முடிகிறபொழுது எங்களுடைய FISCAL DEFICIT 3.48 சதவிகிதம்; நீங்கள் விட்டுவிட்டு போகிறபொழுது 4.6 சதவிகிதம்; நாங்கள் முடிக்கிறபொழுது 3.48 சதவிகிதம்; அதைப்போல எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் REVENUE DEFICIT பற்றிச் சொன்னார்கள். REVENUE DEFICIT கூட பார்த்தீர்களென்றால் GSDP சதவிகிதமாக நாம் பார்த்தால் நீங்கள் விட்டுவிட்டு போகிறபொழுது 3.49 சதவிகிதம், நாங்கள் இப்போது முடியும்போது வெறும் 1.94 சதவிகிதம். கடன் பற்றி நான் விளக்கியிருக்கிறேன். அந்தக் கடனுடைய வளர்ச்சியையும் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். GSDP ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி உங்களுடைய ஆட்சியில் நீங்கள் விட்டுவிட்டு போகிறபொழுது 52 சதவிகிதம் இருந்தது. இப்போது கழக ஆட்சியில் அது இரண்டு மடங்காகி 100 சதவிகிதம் வந்திருக்கிறது. எனவே, இதையெல்லாம் நான் எதற்காக சொல்கிறேன் என்று கேட்டால், ஒட்டுமொத்தமாகஒருநிதிமேலாண்மை எவ்வாறு இருக்க வேண்டுமென்று ஒப்பீட்டு அளவு எடுத்துக்கொண்டால் நாங்கள் அதை மிகச்சிறப்பாகவே கையாண்டிருக்கிறோம். அதைப்போல, நிபுணர் குழு ஏறத்தாழ ஐந்து முறை அந்தக் குழுவோடு நாங்கள் கூட்டம் நடத்தியிருக்கிறோம். அரசு அறிவிக்கக்கூடிய எல்லாத் திட்டங்களுக்கும் அவர்களுடைய ஆலோசனைகளும், அவர்களுடைய ஒவ்வொரு பங்களிப்பும் இருக்கிறது. அதனுடைய அடிப்படையில்தான் இன்றைக்கு நாம் நடத்திக் கொண்டிருக்கக்கூடிய பல்வேறு சமூகநலத் திட்டங்கள், உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவர்களுடைய ஆலோசனைகளை எல்லாக் கட்டத்திலும் நாங்கள் பெற்றிருக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.

மருத்துவம் – வேளாண்மை – சட்டம் – மீன்வளம் –தொழிற்படிப்புகளுக்கு

7.5 சதவிகித இட ஒதுக்கீட்டை முதல்வர் செயல்படுத்தியதால் உயர்கல்வி 47 சதவிகிதம் எட்டியுள்ளது!

சட்டப்பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

சென்னை, பிப். 20– முதலமைச்சர் அவர்கள் 7.5 சதவிகித இடஒதுக்கீட்டை மருத்துவம், வேளாண்மை, சட்டம், மீன்வளம் போன்ற பல்வேறு தொழிற்படிப்புகளுக்கு கொண்டு வந்ததன் காரணமாக உயர்கல்வியின் வளர்ச்சி 47 சதவிகிதம் எட்டியுள்ளது என்று அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (18.02.2026) சட்டப்பேரவை நிதிநிலை அறிக்கை விவாதத்தில் விளக்க பதிலளித்தார்.

இது குறித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது:

மருத்துவக் கல்லூரிகள் குறித்து வேப்பனஹல்லி மன்ற உறுப்பினர் அவர்கள் உரையாற்றியிருக்கிறார்கள். ஏற்கெனவே இது சம்பந்தமதாக பலமுறை விவாதிப்பப்பட்டிருக்கிறது. விளக்கமும் அளிக்கப்பட்டிருக்கிறது. மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்த வரை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2011 ஆம் ஆண்டு தொடக்கத்தில் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்கின்ற அந்தத் திட்டத்தை இந்தியாவில் முதன் முதன்முதலில் முன்மொழிந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதன் தொடர்ச்சியாக வந்த அந்தக் கல்லூரிகள் என்பது உங்கள் ஆட்சிக் காலத்திலேயே அனுமதி பெறப்பட்டு தொடங்கப்பட்டிருந்தாலும் அந்தப் பணிகள் முடிவுற்றது என்பது கடந்த ஆண்டுவரை, கடந்த 4 ஆண்டுகளில், ஒரு மருத்துவக் கல்லூரியின் கட்டமைப்பிற்கு குறைந்தது 400 கோடியாவது செலவாகும்.

நீங்கள் தொடங்கி வைத்துவிட்டுப் போனதற்குப் பிறகு அந்தக் கல்லூரிகளை கட்டி கல்லூரி மருத்துவமனைகளை சட்டி திறந்ததென்பது கடந்த ஓராண்டுக்கு முன்புவரை 11 கல்லூரிகளும் கல்லூரி மருத்துவமனைகளும் திறக்கப்பட்டிருக்கின்றன. தேதி வாரியாக எவ்வெப்போது அக்கல்லூரி மருத்துவமனைகள் திறக்கப்பட்டது, என்கின்ற விவரங்களை ஏற்கெனவே, பலமுறை சொல்லியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல தற்போது 7.5 சதவிகித இட ஒதுக்கீடு என்றார்கள். 7.5 சதவிகித இட ஒதுக்கீடு கொண்டு வந்தது உங்களுடைய ஆட்சிக் காலத்தில் மறுப்பில்லை. ஆனால் அந்த 7.5 சதவிகித இட ஒதுக்கீடு வேண்டுமென்கின்ற கோரிக்கை அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் இன்றைய முதல்வர் அவர்களால் விடுக்கப்பட்டது. வந்த தற்குப் பின்னர் 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கான மசோதா நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி தூங்கிக்கொண்டிருந்தவர்கள் நீங்கள் அந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டும், மசோதாவுக்கு ஒப்புதல் தரப்பட வேண்டுமென்று, ஆளுநர் மாளிகையின் முன்னால் போராட்டத்தை நடத்தி அதை அன்றைக்கு செயல்பாட்டிற்குக் கொண்டு வந்தது, முதலமைச்சர் அவர்கள். அந்த மசோதாவை நிறை வேற்றுவகற்கு எந்த நடவடிக்கையாவது எடுத்தீர்களா? இங்கு அனைத்துக் கட்சி மன்ற உறுப்பினர்களின் ஒப்புதலோடு மசோதா நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பப்பட்டது.

ஆளுநர் அவர்கள் 3 மாத காலமாக அந்த மசோதாவை கிடப்பில் போட்டு வைத்திருந்தார். அதை நிறைவேற்றுவதற்கு எந்த வகையிலாவது, அன்றைய ஆளுங்கட்சி நடவடிக்கை எடுத்ததா திமுக அன்றைக்கு நடத்திய ஒரு மிகப்பெரிய அளவிலான, ஆளுநர் மாளிகைக்கு முன்பாக போராட்டம் தான் அந்த மசோதா நிறைவேறுவதற்குக் காரணமாக இருந்தது. மரியாதைக்குரிய சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் இன்னொரு செய்தியையும் சொன்னார்கள் இன்றைக்கு 47 சதவிகிதம் உயர் கல்வியில், ஒன்றிய அரசின் உயர்கல்வி சேர்க்கை 28.4, தமிழ்நாட்டில் உயர்கல்வியின் சேர்க்கை 47 சதவிகிதம், அதற்கான காரணங்கள், தமிழ்புதல்வன், நான் முதல்வன், புதுமைப் பெண் போன்ற பல்வேறு திட்டங்களின் வாயிலாக இன்றைக்கு தமிழ்நாடு அடைந்திருக்கின்ற வளர்ச்சிதான். ஒரு 12.5 இலட்சம் மாணவ, மாணவியர் தமிழ்புதல்வனிலும், புதுமைப் பெண்ணிலும் பயன் பெற்றிருக்கிறார்கள்.

42 இலட்சம் பேர் நான் முதல்வனில் பயன்பெற்றிருக்கிறார்கள் இவ்வாறு பயன்பட்டது மட்டுமல்ல, 7.5 சதவிகித இட ஒதுக்கீடு என்பது நீங்கள் வெறும் மருத்துவத்திற்கு மட்டுமே தந்தது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் மருத்துவம், பல் மருத்துவம், வேளாண்மை, சட்டம், மீன்வளம் போன்ற பல்வேறு தொழிற் படிப்புகளுக்கு அந்த 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டைத் தந்து, 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு எல்லாமே இலவசம். அதாவது, தங்குமிடம் இலவசம் கல்விக் கட்டணம் இலவசம், உணவுக் கட்டணம் இலவசமென்று அனைத்துத் துறை தொழிற் படிப்புகளுக்கும் நம்முடைய முதல்வர் அவர்கள் அந்த இட ஒதுக்கீட்டை கொண்டு வந்ததுதான் இந்த 47 சதவிகித உயர் கல்வி வளர்ச்சிக்கு காரணம் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஓர் அரசாங்கம் செயல்படுத்திய திட்டங்களை அடுத்து வந்த அரசாங்கம் தொடர்ந்திட வேண்டுமென்பது நியதி என்று சொன்னார். மிக்க மகிழ்ச்சி, மதுரவாயிலிருந்து துறைமுகம் வரைக்கும் 1650 கோடி ரூபாய் செலவில் 21 கி.மீ நீளத்திற்கு ஒரு மேம்பாலத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அன்னை சோனியா காந்தி அவர்களையும், மன்மோகன் சிங் அவர்களையும் அழைத்து வந்து, இங்கு அடிக்கல் நாட்டி ரூ.500 கோடி செலவு செய்து, 25 சதவிகித வேலைகள் முடிந்த பிறகும், அந்தப் பாலத்தைக் கட்டாமல் இருந்தது யார், ஓமந்தூரார் அரசு தலைமை செயலகத்தை ஒரு மருத்துவமனையாக மாற்றி, அதைச் செய்யாமல் இருந்தது யார், இதுபோன்ற 100 திட்டங்களைச் சொல்லலாம். அதையெல்லாம் நீங்கள் செய்தீர்கள், ஆனால் நாங்கள் நீங்கள் கட்ட ஆரம்பித்தாலும் அதை முடித்து கடைசியாக திறக்கின்ற 6 மாதம் முன்னாடி வரைக்கும் திறந்து முடித்திருப்பது திமுக அரசு முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின்.

எதிர்க்கட்சித் தலைவர் மதுரவாயல் மேம்பாலம் என்பது கூவம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட திட்டமிட்டதால் அதை நிறுத்திவிட்டோம் என்று சொன்னார்கள். இது எதிர்காலத்தில் ஒரு தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதற்காக ஒரு சிறிய விளக்கம், சிங்கப்பூரில் கடலைத் தூர்த்து துறைமுகத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். துபாயில் கடலைத் தூர்த்து ஒரு நகரத்தையே ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஜப்பானில் மிகப்பெரிய அளவிலான பேரழிவுக்குப் பிறகு கடலைத் தூர்த்து நிறைய பெரிய கட்டமைப்புகளே வந்து கொண்டிருக்கின்றன.

கூவம் ஆற்றின் குறுக்கே அந்த BEAM, தூணை அமைத்தால் நீரோடை பாதிக்கப்படும் என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. அதில் என்னவென்றால் தற்போது ரூ.1,650 கோடியில் கட்ட துவங்கப்பட்டது. அதே இடத்தில் அதே பாலத்தின்மீது தற்போது ஈரடுக்குப் பாலத்திற்காக ஒன்றிய அரசு அனுமதி தந்து, சுமார் ரூ.5,500 கோடியில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, ஒன்றிய அரசிற்கு அழுத்தம் தந்து, இன்றைக்கு அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மிக விரைவில் அந்தப் பணிகள் நிறைவடையப்போகிறது. நீங்கள் நினைத்தது, ஓரடுக்குப் பாலத்தைக் கட்டினால், கலைஞர் அவர்களுக்கு 19 கிலோ மீட்டருக்கான ஓர் உயர்மட்ட பாலம் வந்தது என்றால், இந்தியாவிலேயே நீண்ட உயர்மட்ட மேம்பாலத்தை அமைத்த பெருமைக்குரியவர் கலைஞர் என்ற பெயர் வந்துவிடக்கூடாது என்பதற்காக அதை தடுத்தீர்கள். ஆனால் தற்போது ஓரடுக்கு இல்லை, ஈரடுக்கு பாலத்தைக் கட்டி, இந்தியாவில் ஈரடுக்குப் பாலத்தை கட்டிய புகழுக்குரியவர் நம்முடைய முதல்வர் என்பதை இப்போது நிலைநிறுத்தியிருக்கிறோம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்று மாலையில் சென்று, கூவம் ஆற்றின் குறுக்கே ஏற்கெனவே கட்டிய PILLAR மேல் இரண்டு அடுக்கு பாலம் அமைக்கப்படுகிறதா, எங்காவது ஒரு PILLAR இடித்து விட்டு மாற்றிக் கட்டுகிறார்களா என்று பார்த்துவிட்டு ஆதாரத்துடன் நாளைக்கு வந்து பேசினார்களென்றால் நன்றாக இருக்கும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் சட்டப்பேரவையில் உரையாற்றினார்.

தென்காசி வடக்கு மாவட்டம்

மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு

தென்காசி வடக்கு மாவட்டம், மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் டி.டி. ராமசந்திரன் அவர்களுக்குப் பதிலாக, **திரு. அ.ராஜதுரை** (233, மாரியம்மன் கோவில் தெரு, வென்றிலிங்கபுரம், பட்டாடைக்கட்டி, நடுவக்குறிச்சி, சங்கரன் கோவில், தென்காசி மாவட்டம்) அவர்கள் மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 19.02.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

ஒழுங்கு நடவடிக்கை ரத்து

தலைமைக் கழக அறிவிப்பு

கன்னியாகுமரி மேற்கு மாவட்டம், தக்கலை வடக்கு ஒன்றியம், கீழகல்குறிச்சியைச் சேர்ந்த எஸ். ஜீடு சேம், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600018
நாள்- 19.02.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

தி.மு.க. தொண்டர் அணி

மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்

கழக தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ,சேகர் அறிவிப்பு!

தி.மு.க. தொண்டர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 24.02.2026 செ